# கண்ணம்மா – என் குழந்தை

சின்னஞ் சிறுகிளியே – கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே – உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

பிள்ளைக் கனியமுதே, – கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே – என் முன்னே
ஆடி வருந்தேனே!

*சி. சுப்ரமணிய பாரதியார்*

www.kids.noolagam.com